# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/7 - 2020 ජූලි මස 27 වැනි සඳුදා - 2020.07.27

*2186/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் விசேட அறிவித்தல்**

*2020.08.05 ஆந் திகதி நடாத்தப்படவிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலின் வாக்குகளை எண்ணல் தொடர்பாகவும் போட்டியிடும் ஒவ்வொரு அரசியற் கட்சிகளின்/சுயேச்சைக் குழுக்களின் முகவர்களை நியமனம் செய்வது தொடர்பாகவும் 2020.07.17 ஆந் திகதி இடம்பெற்ற கட்சிச் செயலாளர்களின் கூட்டத்தின்போது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள* COVID *- 19 இன் புதிய நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைவாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றுவதென தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதென,*

*1. 2020.08.05 ஆந் திகதி நடாத்தப்படவிருக்கும் தேர்தலின் வாக்கெண்ணல், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களையும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களையும் உரியவாறு அறிவுறுத்தி 2020, ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி முற்பகல் 7.00 மணிக்கு அல்லது 8.00 மணிக்கு ஆரம்பிப்பதெனவும் ;*

*2. 2020.08.05 ஆந் திகதி வாக்குப் பெட்டிகளை மீளப்பெற்றுக்கொள்வதை கண்காணிப்பதற்காக, பொறுப்பேற்கும் மண்டபமொன்றுக்கு ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து இரண்டு முகவர்களை நியமனம் செய்ய முடியுமெனவும்;*

*3. 2020.08.05 ஆந் திகதியன்று இரவில் வாக்கெண்ணும் கட்டத் தொகுதியில் தங்கியிருப்பதற்காக வாக்கெடுப்புப் பிரிவொன்றுக்கு ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து இரண்டு முகவர்களை நியமனம் செய்ய முடியுமெனவும் ;*

*4. வாக்கெண்ணும் முதலாம் கட்டம் (ஒவ்வொரு வாக்குப்பெட்டியிலும் இருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடல்), இரண்டாம் கட்டம் (கட்சிகளினால்/குழுக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குத் தொகையைக் கணக்கிடல்) மற்றும் மூன்றாம் கட்டம் (விருப்பு வாக்கெண்ணல்) கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் வாக்குகளை எண்ணும் நிலையமொன்றுக்கு ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு முகவர்களை நியமனம் செய்ய முடியுமெனவும் ;*


1A - PG 5071 — 267 (2020/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5. மூன்றாம் கட்டத்தின்போது ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சியின்/குழுவின் விருப்பு வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படுமெனவும், விருப்பு வாக்குகள் எண்ணப்படும் கட்சியின்/குழுவின் முகவர்களுக்கு மாத்திரம் அச்சந்தர்ப்பத்தில் அங்கிருப்பதற்கு அனுமதி வழங்கப்படுமெனவும் ;

6. அதன் பின்னர் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் கட்சிகளின்/குழுக்களின் முகவர்கள், பிரதான வாக்கெண்ணும் அலுவலர்களின் அறிவித்தலுக்கிணங்க மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க முடியுமெனவும் ;

7. தேர்தல் மாவட்டத்திற்கு உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்பட வில்லையாயின் விருப்பு வாக்குகள் எண்ணப்பட மாட்டாதெனவும், உறுப்பினர் பதவிகளுக்கு உரித்துக்கொண்டுள்ள கட்சிகள்/குழுக்கள் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர், உறுப்பினர் பதவிகள் உரித்தாகாத அனைத்து கட்சிகளின்/குழுக்களின் முகவர்களும் வாக்கெண்ணும் கட்டடத் தொகுதியிலிருந்து வெளியேறுதல் வேண்டுமெனவும்.

தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**என்.ஜே. அபேசேகர,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
*2020, யூலை மாதம் 26.*

**அட்டவணை**

| தேர்தல் மாவட்ட இலக்கம் | தேர்தல் மாவட்டம் | வேட்பாளர்களின் எண்ணிக்கை | சாதாரண வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு நியமனம் செய்ய முடியுமான முகவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | 1 ஆம், 2 ஆம் கட்டங்களுக்கு | 3 ஆம் கட்டத்திற்கு (மேலதிகமாக) | 3 ஆம் கட்டத்திற்கு நியமனம் செய்ய இயலுமான ஆகக்கூடிய முகவர்களின் எண்ணிக்கை (1 ஆம் 2 ஆம் கட்ட முகவர்கள் உள்ளிட்ட) |
| 1 | கொழும்பு | 22 | 03 | 09 | 12 |
| 2 | கம்பஹா | 21 | 03 | 09 | 12 |
| 3 | களுத்துறை | 13 | 03 | 09 | 12 |
| 4 | மஹநுவர | 15 | 03 | 09 | 12 |
| 5 | மாத்தளை | 08 | 03 | 05 | 08 |
| 6 | நுவரெலியா | 11 | 03 | 08 | 11 |
| 7 | காலி | 12 | 03 | 09 | 12 |
| 8 | மாத்தறை | 10 | 03 | 07 | 10 |
| 9 | அம்பாந்தோட்டை | 10 | 03 | 07 | 10 |
| 10 | யாழ்ப்பாணம் | 10 | 03 | 07 | 10 |
| 11 | வன்னி | 09 | 03 | 06 | 09 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தேர்தல் மாவட்ட இலக்கம் | தேர்தல் மாவட்டம் | வேட்பாளர் களின் எண்ணிக்கை | சாதாரண வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு நியமனம் செய்ய முடியுமான முகவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | 1 ஆம், 2 ஆம் கட்டங்களுக்கு | 3 ஆம் கட்டத்திற்கு (மேலதிகமாக) | 3 ஆம் கட்டத்திற்கு நியமனம் செய்ய இயலுமான ஆகக்கூடிய முகவர்களின் எண்ணிக்கை (1 ஆம் 2 ஆம் கட்ட முகவர்கள் உள்ளிட்ட) |
| 12 | மட்டக்களப்பு | 08 | 03 | 05 | 08 |
| 13 | திகாமடுல்ல | 10 | 03 | 07 | 10 |
| 14 | திருகோணமலை | 07 | 03 | 04 | 07 |
| 15 | குருநாகல் | 18 | 03 | 09 | 12 |
| 16 | புத்தளம் | 11 | 03 | 08 | 11 |
| 17 | அநுராதபுரம் | 12 | 03 | 09 | 12 |
| 18 | பொலன்னறுவை | 08 | 03 | 05 | 08 |
| 19 | பதுளை | 12 | 03 | 09 | 12 |
| 20 | மொணராகலை | 09 | 03 | 06 | 09 |
| 21 | இரத்தினபுரி | 14 | 03 | 09 | 12 |
| 22 | கேகாலை | 12 | 03 | 09 | 12 |

* 1ஆம் கட்டம் - ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களைக் கணக்கிடல்.

* 2ஆம் கட்டம் - ஒவ்வொரு கட்சியும்/குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகளை கணக்கிடல்.

* 3ஆம் கட்டம் - விருப்பு வாக்குகளை எண்ணும் கட்டம் .

8-181

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.